**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110294

1. District மாவட்டம்: KARUR    PS: காவல்நிலையம்: V & AC    Year: ஆண்டு: 2020    FIR No.: மு.த.அ. எண்: 06/AC/2020    Date: நாள்: 07.11.2020

2. (i) Act சட்டம்: PREVENTION OF    Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: CORRUPTION ACT 1988    Sections பிரிவுகள்: 7, 7 r/w 12
   (iii) Act சட்டம்: AS AMENDED IN 2018    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 06.11.2020    Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 1545 Hrs    Time to : நேரம் வரை 23.00 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.11.2020    Time : நேரம் 07.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —    Time : நேரம் —

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    சுயமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகங்கள் வளாகம் கரூர், 5.km வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. நடராஜன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. செத்துச்சாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1972
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் கா.நி.கண்காணிப்பாளர் ஒரு.த.உ.மாநி கரூர்
   (g) Address : முகவரி —

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு. பழனிச்சாமி, த/பெ. பச்சை தொழிலாளர் உதவி ஆய்வாளர் சரகம்.2 தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம். கரூர்.

   2. திரு. ராமன், த/பெ வைத்தியலிங்கம் அலுவலக உதவியாளர்/ ஜெய் 71, வையாபுரி பிள்ளை ஸ்டோர் தெற்கு தெரு. கரூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

VIDE FORM 91 SEPARETELY ENCLOSED.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Rs. 36,189.

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக கு.எண் 06/AC/2020. U/S 7, 7 r/w 12 OF PREVENTION OF CORRUPTION ACT 1988 as AMENDED IN 2018 தொடர்பு தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed A. PRASANNA VENKATESH Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS INSPECTOR, V&AC ...on point of jurisdiction. KARUR.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

சுபமாக (signature)  (signature) 7.11.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.11.2020, 11.00 Hrs

Name: பெயர் M. NATARAJAN
Rank: நிலை ......................No. எண் .........
DSP V&AC KARUR.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.6/AC/2020, u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018,**

**சமர்ப்பிக்கப்படுகிறது.**

கரூர் மாவட்டம், வெண்ணைமலை தொழிலாளர் துறை அலுவலகத்தில் சட்ட அமலாக்க பிரிவில் இரண்டாம் சரக தொழிலாளர் உதவி ஆய்வாளராக பணிபுரியும் திரு.பழனிச்சாமி என்பவர் அவருடைய சரகத்திற்கு உட்பட்ட அதாவது கரூர் நகரில் உள்ள கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் வியாபரத்தின்போது சட்டரீதியான வழிகளில் தொந்தரவு தராமல் இருக்க தீபாவளிக்கு மாமூல் என்ற பெயரில் லஞ்சமாக பணம் வசூல் செய்து வருவதாகவும், அதனை திரு.ராமன் என்ற ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் உதவியுடன் அலுவல் நேரத்தில் வசூல் செய்து வருவதாகவும், கிடைத்த நம்பகதகுந்த தகவலின் பேரில் 06.11.2020-ந்தேதி மாலை சுமார் 04.30 மணி முதல் இரவு 11.00 மணி வரை கரூர் இரண்டாம் சரக தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் நான், அரசு சாட்சிகள் 1) டாக்டர் திரு. பெ.ஜெகதீசன், கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், மாயனூர், கரூர் மாவட்டம், 2) திரு.க.பாலசுப்பிரமணியன், இருக்கை பணி கண்காணிப்பாளர், முதன்மைக் கல்வி அலுவலகம், கரூர் மற்றும் காவல் குழுவினருடன் மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தேன்.

2) இந்த சோதனைக்காக 06.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 03.45 மணிக்கு மேற்படி அரசு சாட்சிகள் மற்றும் காவல் குழுவினருடன் திடீர் சோதனை செய்ய வேண்டி அரசு வாகனம் TN 22 G 5000ல் பழைய சேலம் பைபாஸ் ரோடு வழியாக கரூர் டவுனில் இருந்து வடக்கு நோக்கி மேற்படி அலுவலகத்திற்கு சென்ற போது, திரு.பழனிச்சாமி என்பவர் TN 45 BK 6447 என்ற சாம்பல் நிற ஹோண்டா ஆக்டிவா வண்டியில் திரு.ராமன் என்பவரை பின்னால் அமரவைத்துக் கொண்டு பழைய சேலம் பைபாஸ் ரோட்டில் வடக்கு நோக்கி வந்தார். கரூர் யூனியன் அலுவலகம் அருகே வந்தவுடன் மேற்கு நோக்கி யூனியன் அலுவலகம் செல்லும் பாதையில் உள்ளே சென்றார். அவர்களை வாகனத்தை நிறுத்தச் சொல்லி, அவர்களிடம் திடீர் சோதனைக்கு வந்த விபரத்தை நான் தெரிவித்தேன். அப்போது இருவரும் சற்று பதட்டம் அடைந்தார்கள். அவர்கள் இருவரையும் ஆசுவாசப்படுத்தினேன். அப்போது அவர்கள் வசம் வண்டியில் ரேய்மான்ஸ் விளம்பர கட்டைப்பை துணிகளுடன் கூடியது ஒன்றும் மற்றும் கருப்பு மற்றும் பச்சை கலரில் காணப்பட்ட சோல்டர் பேக் ஒன்றும் காணப்பட்டது. அந்த இடத்தில் போதிய

வசதிகள் இல்லாததாலும், நடுசாலை என்பதாலும், விசாரணைக்காக அவர்களை அங்கிருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் வடக்கே அமைந்திருந்த ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக கட்டிடத்திற்கு அழைத்து வந்து திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டேன்.

3) இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் தொடர்ச்சியாக மாலை சுமார் 4.30 மணிக்கு திரு.பழனிச்சாமி மற்றும் திரு.ராமன் ஆகியோரை சாட்சிகள் முன்னிலையில் காவலர்கள் உதவியுடன் தொழிலாளர் துறை அலுவலகத்திற்குள் அழைத்து வந்தேன். கட்டிடத்தின் தரை தளத்தில் கிழக்கு புறமாக வடக்கு நோக்கி பூட்டிய நிலையில் அமைந்திருந்த தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர், இரண்டாம் சரகம் அலுவலகத்திற்கு இருவரையும் அழைத்து வந்து உதவி ஆய்வாளர் திரு.பழனிச்சாமி என்பவரை விசாரித்தேன். அப்போது அவர், தான் காலையில் அலுவலகத்திற்கு வந்து, அலுவலகத்தை பூட்டிவிட்டு தீபாவளி மாமூல் வசூலுக்கு சென்றதாக சொல்லி அவரிடம் இருந்த சாவியை வைத்து, அவரது அலுவலக அறையை திறந்தார். இந்த நடவடிக்கையின் போது மேற்படி ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாக கட்டிடத்தில், இரண்டாவது சரக உதவி ஆய்வாளர் அலுவலகம் தனிப்பட்ட அலுவலகமாக இயங்கியதும், ஆவணங்கள் பராமரிக்கப்பட்டதும் தெரியவந்தது.

4) அதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையின் போது அலுவலகத்திற்குள் அழைத்துவரப்பட்ட திரு.ராமன் அவர்களை விசாரித்தேன். அதில் அவர், தான் கரூர் மாவட்ட தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர் 2 ஆம் சரக அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து 30.11.2009 ஆம் தேதி வயது முதிர்வு காரணமாக பணி ஓய்வு பெற்றுவிட்டதும், பணி ஓய்வு பெற்ற காலத்திலிருந்தே தொழிலாளர் துறை இரண்டாம் சரக உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் ஏதாவது வேலை என்றால் அவ்வப்போது செய்து கொடுப்பதும், அவர் நீண்ட காலம் கரூரில் பணிபுரிந்ததததால் பெரும்பாலான கடைக்காரர்களுக்கு அடையாளம் தெரியும் என்பதும், அதனால் இரண்டாம் சரக உதவி ஆய்வாளர் திரு.பழனிச்சாமி அவர்கள் இந்த 2020 ஆம் ஆண்டு தீபாவளிக்கு கடைகளில் மாமூல் வசூல் செய்ய அவரை கூப்பிட்டார் என்றும், அதற்காக வசூலான தொகையிலிருந்து ரூ.1000 முதல் ரூ.1500 வரை வசூலான தொகையை பொருத்து திரு.ராமனுக்கு பங்கு பணம் தருவதாக

சொன்னதும். அதனால் அவருடன் சேர்ந்து கடந்த ஒரு வாரமாக கரூர் தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர் இரண்டாம் சரக அலுவலக எல்லைப்பகுதியில் உள்ள கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தீபாவளி மாமூல் வசூல் செய்ததும் தெரியவந்தது.

5) இந்த திடீர் சோதனையின் போது, அவர் வசம் சட்டை பாக்கெட்டில் ரூ.140/- ம், பேண்ட் பின்புற வலது பாக்கெட்டில் மூன்று 500 ரூபாய் நோட்டுகள், இரண்டு 200 ரூபாய் நோட்டுகள், ஒரு 100 ரூபாய் நோட்டு அடங்கிய மொத்தம் ரூ.2000மும், பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் ஒரு 500 ரூபாய் நோட்டு, மூன்று 200 ரூபாய் நோட்டுகள், நாற்பத்தி இரண்டு 100 ரூபாய் நோட்டுகள், இருபத்தி ஆறு 50 ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.6,600/-யை ஒரு பழைய காக்கி நிற கவரினுள் வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்தார்.

6) மேற்படி தொகைகளை பற்றி விசாரித்த போது, அவர் ரூ.140/- தன்னுடைய சொந்த பணமாகும் என்றும், ரூ.2000/- இன்று வசூல் செய்த மாமூல் தொகையாகும் என்றும், கவரில் இருந்த ரூ.6,600/- உதவி ஆய்வாளர் திரு.பழனிச்சாமி அவர்கள் தனக்கு ஏற்கனவே மாமூல் வசூல் செய்ததற்காக கொடுத்த பங்கு தொகை என்றும் சொன்னார். எனவே ரூ.140/- சொந்த பணத்தை அவர் வசமே விசாரணை முடித்து திருப்பி கொடுக்கப்பட்டது. லஞ்சமாக வசூல் செய்த தொகை ரூ.2000/- மற்றும் அவருடைய பங்கு தொகை ரூ.6600/- மற்றும் அது வைக்கப்பட்டிருந்த கவர் ஆக மொத்தம் ரூ.8600/-யை விசாரணைக்காக கைப்பற்றினேன். இது குறித்து அவரிடம் ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.ராமன் என்பவரது மேற்படி செயல் u/s 7 r/w 12 of PC Act, 1988 as amended in 2018 –ன்படி வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் உள்ள செயலாகும்.

7) தொடர்ந்து இந்த நடவடிக்கையின் போது, திரு.பழனிச்சாமி, தொழிலாளர் உதவி ஆய்வாளர், சரகம் - 2 அவர்களை விசாரித்த போது, அவர் இந்த வருடம் தீபாவளிக்கு தனக்காகவும், தன்னுடைய மேலதிகாரிகளுக்காகவும் பணம் வசூல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றும், அதனால் ஏற்கனவே தன்னுடைய

அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்ற திரு.ராமன் என்பவர் உதவியுடன் கடந்த ஒரு வாரமாக கரூர் தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர் இரண்டாம் சரக அலுவலக எல்லைப்பகுதியில் உள்ள கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தீபாவளி மாமூல் வசூல் செய்ததாகவும், நாள் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை பணம் வசூல் ஆனது என்றும், இன்று கரூர் டவுன் பகுதியில் வசூல் செய்ததால் ரூ.20 ஆயிரத்திற்கு மேல் வசூல் ஆனதாகவும், ஒரு சில தொகைகளை திரு.ராமன் வசூல் செய்தார் என்றும், தான் பெரும்பாலான தொகைகளை வசூல் செய்தேன் என்றும், அப்போது ரேமான்ஸ் கடையில் மட்டும் 4 செட் பேண்ட் சட்டை துணிகளை தீபாவளி மாமூலாக நான் வாங்கினேன் என்றும் சொன்னார்.

8) அப்போது அவர் பேண்ட் பாக்கெட்டில் இருந்த கருப்பு நிற மணிபர்சில் இருந்து இரண்டு கத்தைகளாக ரூபாய் நோட்டுகளை ஆஜர் செய்தார். அதில் ஒரு கத்தையில் பதினான்கு 500 ரூபாய் நோட்டுகளும், ஒரு 50 ரூபாய் நோட்டும், இரண்டு 10 ரூபாய் நோட்டுகளும் ஆக மொத்தம் ரூ.7070 இருந்தது. அது தன்னுடைய சொந்த பணம் என்று தெரிவித்தார். விசாரணைக்கு பிறகு ரூ.7070 யை அவர் வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இது தவிர இரண்டு 2000 ரூபாய் நோட்டுகளும், முப்பத்தி மூன்று 500 ரூபாய் நோட்டுகளும் அடங்கிய மொத்தம் ரூ.20,500 ஒரு கத்தையாக இருந்தது. அதை பற்றி விசாரித்த போது, இன்று கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் தீபாவளி மாமூலாக தான் வசூல் செய்த தொகையாகும் என்று தெரிவித்ததால், அந்த தொகை ரூ.20,500/- விசாரணைக்காக கைப்பற்றினேன்.

9) மேலும் அவர் வசம் காணப்பட்ட கரூர் ரேமான்ஸ் ஷோரூம் விளம்பர கட்டைப்பையில், 1) பச்சை நிற பேண்ட் துணி, பச்சை மற்றும் வெள்ளை நிறத்தில் கோடுகள் போட்ட சட்டை துணி இணைந்த கோம்போ பேக் நீல நிற அட்டை பெட்டி, 2) சிமெண்ட் கலர பேண்ட் துணி-1, மெருன் கலர் பேண்ட் துணி – 1, இளம் பச்சை நிற பேண்ட் துணி-1 ஆக மொத்தம் 3 பேண்ட் துணிகள், 3) சந்தன கலர் சட்டை துணி-1, லேசான நீல நிற சட்டை துணி-1, நீலம் நிற

(லினன்) சட்டை துணி-1 ஆக மொத்தம் 3 சட்டை துணிகள் இருந்தது. இந்த 4 செட் துணிகள் அடங்கிய கட்டை பையை துணிகளுடன் அவர் இனாமாக தீபாவளிக்காக பெற்றதால் அவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

10) இந்த நடவடிக்கையின் போது, ரெய்மான்ஸ் ஷோரூம் எம்.டி திரு.விவேகானந்தன் அவர்களை தொழிலாளர் உதவி ஆய்வாளர் சரகம்-2 அலுவலகத்திற்கு மேற்படி துணி விற்பனை சம்மந்தமான பில்லுடன் ஆஜராக கோரப்பட்டது. அதன்படி அவர் ஆஜரானார். அவரிடம் மேற்படி 4 செட் பேண்ட் மற்றும் சட்டை துணிகள் திரு.பழனிச்சாமி அவர்களால் இனாமாக அவரது கடையிலிருந்து பெறப்பட்டது என்பதை உறுதி செய்து கொள்ளப்பட்டது. மேலும் அவர் இது போன்று இனாம் கொடுக்கவில்லை என்றால் பின்னாளில் ஏதாவது தொந்தரவு செய்வார்கள் அதனால் வேறு வழியில்லாமல் கொடுத்தேன் என்றும் தெரிவித்தார். அவர் ஆஜர்படுத்திய சரிகட்டுதலுக்கான Voucher Bill மேற்படி துணிகளுக்கான மொத்த தொகை அதாவது Labour Inspector RS.7089/- என்று எழுதப்பட்டிருந்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இது குறித்து அவரிடம் விரிவான வாக்குமூலம் பெறப்பட்டது.

11) மேலும் இந்த திடீர் சோதனையின் போது, பணபதிவேட்டின்படி அரசு பணம் ரூ.100/- கையிருப்பில் இருந்ததை சரிபார்த்துவிட்டு திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.பழனிச்சாமி அவர்களுக்கு படை வீரர்கள் கொடி நாள் நிதி இலக்கு 2019 க்கு ரசீது எண்கள் 2813501 முதல் 2813580 வரை மொத்தம் 80 ரசீதுகள் தலா ரூ.100 வீதம் ரூ.8000 க்கு உண்டான இலக்கில் ஒரு ரசீது கூட யாருக்கும் கொடுத்து பணம் வசூல் செய்யவில்லை என்பது தெரியவந்தது. மேலும் இரண்டாம் சரக உதவி ஆய்வாளர் அலுவலக வருகை பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் பக்கம் 1 முதல் 44 வரை இருந்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இரண்டாம் சரக உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் இயக்க பதிவேடு பராமரிக்கப்படவில்லை. தொழிலாளர் துறை அமலாக்க உதவி ஆணையர் அலுவலக வருகை பதிவேட்டின் சான்றொப்பமிட்ட நகல் பக்கம் 1 முதல் 46 வரை இருந்ததை, இளநிலை உதவியாளர்

திரு.ராஜமுருகன் மற்றும் திரு.பழனிச்சாமி, உதவி ஆய்வாளர் ஆகியோர்களின் சான்றொப்பத்துடன் விசாரணைக்காக பெறப்பட்டது. திரு.பழனிச்சாமி அவர்களிடம் விரிவான ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. திரு.பழனிச்சாமி என்பவரது மேற்படி செயல் u/s 7 of PC Act, 1988 as amended in 2018 –ன்படி வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் உள்ள செயலாகும்.

12) இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் போது அலுவலக ஆவணங்களுக்கோ, அலுவலர்களுக்கோ எந்தவித சேதாரமும், தொந்தரவுமின்றி நடத்தி முடிக்கப்பட்டதை சாட்சிகள் முன்பு உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை ஆரம்பம் முதல் முடியும் வரை அலுவலர்கள் அனைவரும் அரசு விதிமுறைகளின்படி முகக்கவசம் அணிந்திருந்ததையும், சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்பட்டதையும் அவ்வப்போது உறுதி செய்து கொள்ளப்பட்டது. மேலும் தேவைப்படும் போதெல்லாம் கிருமிநாசினி கொண்டு அலுவலர்களின் கைகள் அடிக்கடி சுத்தம் செய்து கொள்ளப்பட்டது.

13) சோதனை நடவடிக்கைகள் முழுவதும், அரசு விதிமுறைகளின்படி சமூக இடைவெளியை கடைபிடித்தும், அவ்வப்போது கிருமி நாசினி கொண்டு அனைவர் கைகளை சுத்தம் செய்தும், முககவசம் அணிந்தும் மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனை தொடர்பான இதர விபரங்கள் 06.11.2020 தேதியிட்ட எனது நடவடிக்கைளில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

14) எனவே, மேற்படி நிகழ்வுகள் தொடர்பாக புலன்விசாரணை செய்யும் பொருட்டு, Karur V&AC Cr.No.6/AC/2020, u/s 7, 7 r/w 12 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி 1) திரு.பழனிச்சாமி, இரண்டாம் சரக தொழிலாளர் உதவி ஆய்வாளர், வெண்ணைமலை, கரூர், கரூர் மாவட்டம், 2) திரு.ராமன், அலுவலக உதவியாளர் (ஓய்வு), சரகம் - 2, தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், கரூர், வசிப்பிட முகவரி:- எண்.71, வையாபுரி பிள்ளை ஸ்டோர், தெற்கு தெரு, கரூர் ஆகியோர்கள் மீது இன்று 07.11.2020 ந்தேதி காலை 07.00 மணிக்கு ஊழல் தடுப்பு இயக்குநரக வாய்மொழி அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்கிறேன்.

15) இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் திடீர் சோதனை நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, கரூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

(எம்.நடராஜன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கரூர்